1986 ஏப்ரல் 30] [திரு. என். சி. இராகவாச்சாரி]

குறிக்கும். அது எப்படி நிர்ணயிக்கப்படலாம் என்பதுபற்றிப் பார்க்க வேண்டும். இப்போது அம்பாசங்கர் கமிஷன் முன்பு எல்லா சாதியினரும் மனு கொடுத்து தங்களையும் சேர்க்க வேண்டும், தங்களையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டார்கள். உயர்ந்த சாதியார்கள் கூட மனு போட்டார்கள். ஆகையால் கமிஷன் ஏற்படுத்துவது நல்லதுதான். கமிஷன் இல்லாமல் தீர்மானம் பண்ண முடியாது. அரசு கமிஷன் போடுவதை நான் வரவேற்கிறேன். சில சாதியர்கள் குறிப்பாக நாவிதர்கள், சலவையாளர்கள், சாதி அடிப்படையிலே பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். பொருளாதார ரீதியிலேயும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். சாதி அடிப்படையிலே எடுத்துக் கொண்டால், சிலர் பணக்காரர்களாகவும் இருக்கிறார்கள். வசதிபடைத்தவர்களும் இருக்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் நிர்ணயிப்பதற்கு அரசு கமிஷனை நியமித்தது. ஆகவே இப்படி கமிஷன் போடுவது நல்லது; அது தேவைதான் என்பதைக் கூறி, இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

3. தகவல் கோரல்.

(2) மேலவை மண்டபத்திற்கும் பக்கத்திலுள்ள தோட்டத்தில் மின் விசிறி எடுக்கப்பட்டது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாற்றுத் தலைவரவர்களே, தொடர்ந்து அவை 2 அல்லது 2½ மணி வரையிலே நடந்து கொண்டிருக்கிறது. இந்த அவைக்குள்ளே உட்கார முடியாமல், சற்று வெளியே போய் பக்கத்திலுள்ள தோட்டத்திலே உட்காரலாமென்று போனால், அங்கு இருந்த 2 மின்விசிறிகள் எடுக்கப்பட்டுவிட்டன. அங்கு உட்கார முடியவில்லை. உடம்பு எல்லாம் எரிகிறது. எனவே உறுப்பினர்கள் அங்கு போய் ஓய்வு எடுப்பதற்கு மின் விசிறிகள் போட ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. பி. இராமலிங்கம்): செயலகம் தக்க வடிக்கை எடுக்கும்.

(பிற்பகல் 12-05)

5. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

* திரு. மீசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கொள்கை விளக்கக் குறிப்பின் மீது சில கருத்துக்களைக் கூறலாம் என்று